OS 58/2020
பி.வா.சா. 2 சாந்தி க/பெ பூபதி
நாள் 01.09.2025

**<u>குறுக்கு விசாரணை</u>**

1. சாட்சியம் அளிப்பதற்கு என்னை யார் அழைத்தார்கள் என்றால் எனது கணவர் சொல்லி சாட்சியம் அளிக்க வந்திருக்கிறேன். வழக்கு யார் தாக்கல் செய்துள்ளார் என்றால் வாதி நீலகண்டன் எனது மகன் ஆவார். பாகம் கேட்டு எனது மகன் வழக்கு தாக்கல் செய்திருக்கிறார் என்றால் சரிதான். வழக்கு சொத்தின் சர்வே எண் மற்றும் விஸ்தீரணம் தெரியுமா என்றால் சர்வே எண் தெரியாது விஸ்தீரணம் 2 ஏக்கர் ஆகும். 1ம் பிரதிவாதி பூபதி எனது கணவர் ஆவார். சுமதி, ஏகவள்ளி ஆகிய இருவரும் எனது மகள்கள் ஆவார்கள். 4ம் பிரதிவாதி எனது தம்பி ஆவார். 5ம் பிரதிவாதி தட்சிணாமூர்த்தி எனது மகள் சுமதியின் கணவர் ஆவார். பொன்னுசாமி கவுண்டர் எனது கணவரின் தகப்பனார் ஆவார். எனது மாமனார் பொன்னுசாமி கவுண்டருக்கு பஞ்சாட்சரம், ரிஷிகேஷ், தேவராஜ், பூபதி ஆகியோர் வாரிசுகள் ஆவார்கள். பொன்னுசாமியின் 4 மகன்களும் அவர்களுடைய பூர்வீக சொத்தை அனுபவம் செய்து வந்தார்கள் என்றால் சரிதான். பஞ்சாட்சரம் என்பவர் திருமணம் ஆகாமலும் வாரிசு இல்லாமலும் இறந்துவிட்டார் என்றால் சரிதான்.

2. நான் கையொப்பம் போடுவேனா என்றால் போடுவேன் தற்போது பார்வை குறைவாக இருக்கிறது. என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.2ல் உள்ள சாட்சி கையொப்பம் என்னுடையது தான். எனது கணவர் கவிதா என்பவருக்கு வா.சா.ஆ.2ன் மூலம் கிரையம் கொடுத்த ஆவணத்தில் நான் எனது மகள்கள் சுமதி, ஏகவள்ளி மற்றும் எனது மகன் நீலகண்டன் ஆகியோர் சாட்சி கையொப்பம் செய்திருக்கிறோம் என்றால் சரிதான். கவிதா எனது கணவரின் அண்ணனான தேவராஜின் பேத்தி என்றால் சரிதான். கவிதாவிற்கு விற்பனை செய்யும் போது நாங்கள் ஒரே குடும்பமாக இருந்தோம் என்றால் இல்லை. நாங்கள் எந்த வருடம் வரை ஒன்றாக இருந்தோம் என்றால் நாங்கள் எப்போதும் ஒன்றாக இருக்கவில்லை. நானும் எனது கணவரும் ஆதிமூலம் என்பவரிடம் இருந்து இடம் வாங்கிய பிறகு தான் எனது மகள்கள் வந்தார்கள். எனது மூத்த மகள் சுமதிக்கு திருமணம் ஆகும்போது நாங்கள் எனது மகன், எனது மகள் ஏகவள்ளி அனைவரும் ஒன்றாக தான் இருந்தோம் என்றால் சரிதான்.

3. கவிதாவிற்கு சொத்து விற்பனை செய்து தான் சுமதிக்கு திருமணம் செய்யப்பட்டது என்றால் சரிதான். குடும்ப சொத்து என்பதால் தான் அந்த சொத்தை விற்பனை செய்து சுமதிக்கு திருமணம் செய்தோம் என்றால் சரிதான். சுமதிக்கு எந்த வருடம் திருமணம் நடந்தது என்றால் எனக்கு நியாபகம் இல்லை. 2006ல் கவிதாவிற்கு விற்பனை செய்த சொத்து குடும்ப சொத்து என்பதால் தான் நாங்கள் அனைவரும் கையொப்பம் செய்தோம் என்றால் சரிதான். கவிதாவிற்கு எழுதி கொடுத்த பத்திரத்தில் எனது கணவர் 3ல் 1பங்கு பாகத்தை எழுதி கொடுத்துள்ளார் என்றால் சரிதான். அதில் மீதம் உள்ள 2 பாகம் ரிஷிகேஷ், தேவராஜ் ஆகியோருக்கு உரிமை என்றால் சரிதான். எனது மகன் நீலகண்டன் காதலித்து திருமணம் செய்து கொண்டார் என்றால் சரிதான். எனது மகன் காதலித்து திருமணம் செய்து கொண்டதால் எனக்கும் எனது கணவருக்கும் எனது மகள்களுக்கும் பிடிக்கவில்லை என்றால் பிடிக்கும் ஆனால் எனது மகன் வரவில்லை.

4. எனது மகன் திருமணத்திற்கு பிறகு பஞ்சாயத்து பேசி மகனை அழைத்தோமா என்றால் எனது மகன் வரவில்லை நாங்கள் அழைக்கவில்லை. எனது மகன் திருமணத்திற்கு பிறகு எங்கள் வீட்டிற்கு வந்தார் என்றாலும் அவர் காதலித்து திருமணம் செய்ததால் நாங்கள் ஏற்றுக்கொள்ளவில்லை என்றால் சரியல்ல. வழக்கு சொத்தை குடும்ப செலவிற்காகவும் கடன் பைசல் செய்வதற்காகவும் விற்பனை செய்ததாக எனது முதன்மை வாக்குமூலத்தில் விவரம் சொல்லியிருக்கிறேன் என்றால் சரிதான். யார் யாருக்கு கடன் பைசல் செய்யப்பட்டது என்று சொல்லமுடியுமா என்றால் நடுக்குப்பத்தில் ஒருவரிடம் ரூ.3,00,000/- வாங்கியிருந்தோம் அவர் பெயர் தெரியாது அவர் தற்போது உயிருடன் இல்லை. மற்றொரு நபரிடம் ரூ.2,00,000/- வாங்கியிருந்தோம் அவர் பெயரும் தெரியாது. கடன் வாங்கியதாக வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. ஆதிமூலம் என்பவரிடம் இருந்து கிரையம் வாங்கியபோது கூட்டுக்குடும்பமாக இருந்தோம் என்றாலும் எனது மகனுக்கு பாகம் கொடுக்கக்கூடாது என்பதற்காக எனது கணவர் இளங்கோ என்வருக்கு விற்பனை செய்துவிட்டார் என்றால் சரியல்ல.

5. வீட்டில் இருந்து நீலகண்டன் 25 சவரன் நகையை திருடி சென்றுவிட்டதாக வழக்கிற்காக பொய்யாக சொல்லியிருக்கிறேன் என்றால் ரூ.3,00,000/- பணமும் 25 சவரன் நகையும் திருடி சென்றுவிட்டார். அதுகுறித்து காவல் நிலையத்தில் புகார் கொடுத்தோமா என்றால் மகன் என்பதால் புகார் கொடுக்கவில்லை. வழக்கு சொத்து கூட்டுக்குடும்ப சொத்து என்பதால் வாதிக்கு பாகம் உள்ளது என்றால் சரியல்ல.